MCOP.No. 17/2019

Date : 16.10.2025

Witness Name & Rank – திருமூர்த்தி - PW1

சாட்சி அழைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. இந்த விபத்து தொடர்பாக காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என் மகள் சென்ற வாகனத்தில் கார் ஓட்டுநர் தான் அவரது அஜாக்கிரதையால் அதிவேகத்தால் ஓட்டிச் சென்று புளிய மரத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. என் மகள் சென்ற வாகனத்தில் கார் ஓட்டுநர் பாலன் தான் மேற்குரிய விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. மேற்படி காருக்கு காப்பீடு ஆனது மூன்றாம் தரப்பினருக்காக மட்டுமே எடுக்கப்பட்டுள்ளது என் மகள் அந்த காரில் பயணம் செய்த நபர் என்பதால் நா என் மகள் மூன்றாம் தரப்பினராக கருத கருதப்பட மாட்டார் எனவே காப்பீடு நிறுவனத்தாரிடமிருந்து இழப்பீடு கோர அவருக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. எனவே மூன்றாவது எதிர்மனுதாரருக்கு எதிரான எனது இழப்பீடு மனுவானது நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல
2. என் மகளுக்க ஏற்பட்டுள்ள காயங்கள் முழுமையாக குணமடைந்து விட்டது எனவே நான் இழப்பீடு அதிகமாக கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மகளுக்கு மேற்கூறிய விபத்தில் நிரந்தர ஊனம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் என் மகளின் இயலாமையை அதிகப்படுத்தி மிகைப்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் எனது மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் அனைத்தும் ஏற்புடையவை அல்ல என்றாலும் சரியல்ல. 3வது எதிர்மனுதாரருக்கு எதிரான மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---